DEPOSITION OF WITNESS

Chapter XXIII code of Criminal Procedure

**IN THE COURT OF SESSIONS JUDGE,**

NAGAPATTINAM.

**Special Sessions Case No. 03/2024**

**Deposition of Witness for Prosecution : P.W.16**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வனிதா | தகப்பனார் பெயர் கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 03.01.2025

**முதல் விசாரணை**

நான் தற்போது வேதாரண்யம் கடலோர காவல் படையில் பணிபுரிந்து வருகிறேன். வேதாரண்யம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியாற்றி போது இந்த வழக்கில் பாதிக்கப்பட்ட பெண் செல்வி. கார்த்திகா த.பெ. ரமேஷ் என்பவரை 23.07.2023 அன்று மருத்துவ பரிசோதனை செய்ய நாகப்பட்டினம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். 24.08.2023 அன்று 164 வாக்கு மூலம் பெற நாகப்பட்டினம் குற்றவியல் நடுவர் எண்.2 அவர்களின் முன்பு ஆஜர் செய்தேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

23.07.2023ம் தேதி காலை 7.00 மணிக்கு அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளரிடம் மருத்துவ நமுனாவை பெற்றேன். அன்று காலை 6.30 மணியளவில் கார்த்திகாவின் இல்லத்திற்கு சென்றேன். நாகப்பட்டினம் அரசு மருத்துவமனையில் காலை 9.15 மணிக்கு மருத்துவரிடம் ஆஜர் செய்தேன். அவர் நல்ல உடல் நலத்துடன் இருந்தார். 24.08.2023 அன்று நாகப்பட்டினம் குற்றவியல் நடுவர் எண்.2 அவர்களின் முன்பாக ஆஜர் செய்தேன். 23.07.2023 அன்று மருத்துவரிடம் ஆஜர் செய்து மதியம் 2, 3 மணியளவில் மருத்துவ பரிசோதனை முடிவடைந்தது.

DEPOSITION OF WITNESS

Chapter XXIII code of Criminal Procedure

**IN THE COURT OF SESSIONS JUDGE,**

NAGAPATTINAM.

**Special Sessions Case No. 03/2024**

**Deposition of Witness for Prosecution : P.W.15**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜெயசீலன் | தகப்பனார் பெயர்<br>கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 03.01.2025

**முதல் விசாரணை**

நான் தற்போது நாகப்பட்டினம் ஆதிதிரவிடர் நல வட்டாட்சியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 09.11.2022 முதல் 22.11.2023 வரை வேதாரண்யம் வட்டாட்சியராக பணியாற்றினேன். அப்போது வேதாரண்யம் வட்டம் கருப்பம்புலம் மேலக்காடு அம்பேத்கர் நகர் என்ற முகவரியை சேர்ந்த செல்வி. கார்த்திகா த.பெ. ரமேஷ் என்பவருக்கு இந்து பரையர் என்ற சாதி சான்றிதழ் 04.08.2023 அன்று வழங்கினேன். என்னிடம் காட்டப்படும் அந்த சான்று நான் வட்டாட்சியராக இருக்கும் போது என்னால் வழங்கப்பட்ட சான்று ஆகும். அது **அ.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதே தேதியில் இந்த வழக்கின் எதிரியான சிங்காரவேல் த.பெ. வடிவேல் என்பவருக்கு இந்து அகமுடையர் என்ற சாதி சான்றிதழை 04.08.2023 அன்று வழங்கினேன். என்னிடம் காட்டப்படும் சாதி சான்று நான் வழங்கியது தான். அது **அ.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

குறுக்கு விசாரணை இல்லை.